உ

அகஸ்திய மஹாமுனிவர்

அருளிச்செய்த

# வைத்திய தைல முறைகள்

3 1 DEC 1987

**In Loving Memory of**
**Late. Janab S. Mohamed Ismail**
**S/o. Late Janab Mohamed Sheriff**
**108, KUMARAN NAGAR,**
**PERAVALLUR, MADRAS-600 082.**

இஃது

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டது.

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்

புத்தக வியாபாரிகள்,

சென்னை - 1.

இதன் விலை] — [ரூ. 1—25

3 1DEC 1981

உ

கடவுள் துணை

அகஸ்திய மஹாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# வைத்திய

# தைல முறைகள்

### பாயிரம் - காப்பு

மாமேவு கௌரிமனோன் மணியாள்செய்ய
மலர்பாதந்தனைத்துதித்து வையமீது
தேமேவுவயித்தியத்தின் றயிலப்பாங்கைச்
செந்தமிழாற்சொல்வதற்குச் சீர்மிகுந்த
காமேவுமூஷிகமீ தேறியன்பர்
கடியிலுறுங்கயமுகவர் கமலமென்னும்
பாமேவுமுபயதிருப் பதந்துதித்துப்
பாங்குடனேகாப்பாகப் பன்னினேனே. 1

பன்னியமாவயித்தியத்தின் றயிலப்பாங்கைப்
பண்டிதர்களனுஷ்டித்த மூலிகைதான்
நன்னயமாய்தேடியுடன் செய்தேயிந்த
நானிலத்திலுள்ளோர்கள் வியாதிதீர
உன்னியகாலையிற்றருகத் தாயின்பாதம்
உளங்கருதிநாதாக்க ளடியைப்போற்றிச்
சொன்னயங்களமைந்தகண பதியின்பாதந்
துதிப்பவர்க்குப்பலநோயுந் தொலையும்சீரே. 2

சீர்மிகுந்தசிவபிரா னடியைப்போற்றி
செய்யமயிலேறிவருங் குகன்றாட்போற்றி
தார்மிகுந்ததிருமா லினிதாள்போற்றி
சத்திசிவகாமியிலட் சுமிதாள்போற்றி
பேர்மிகுந்தகலைமகளின் சரணம்போற்றி
பேசரியபெரியோர்கள் பதமும்போற்றி
ஏர்மிகுந்ததயிலத்தின் வயித்தியக்கூறை
யிப்புவியிற்செந்தமிழா லிசைத்திட்டேனே. 3

பாயிரம் முற்றிற்று.

# நூல்

## மேகத்திற்குத் தைலம்

நிகரில்லாமேகத்தின் றயிலங்கேளு
நிலையானசந்தனமு மிலாமிச்சோடு
மகிழ்வான ஆவாரையின்பட்டைதானும்
வகைபத்துப்பலமாக வாங்கியேதான்
பிகலாமற் * றூணிநீர் விட்டொன்றாய்ப்
பெருமையுற்றகிஷாயத்தை வாங்கிக்கொண்டு
நகையாமல்நல்லெண்ணெய் நாழிவிட்டு
நன்றாகிவேர்பலந்தா னரைத்துப்போடே. 1

போட்டதனைக்காய்ச்சிமெழு குற்றதானாற்
புகட்டியவேடிந்திடுவாய் பூசக்கேளு
நாட்டிதனைமுழுகிவர மேகந்தீரும்
வலமானதேகமது † யிறுகும்பாரு
பூட்டதனைமேகநீர் போகவேண்டிப்
புனிதமாய்மருந்தொன்று புகலக்கேளு
சாட்டதனைமுன்புசொன்ன பற்பங்கொண்டு
சார்ந்துநீகொதித்திடவே சாந்தமாமே. 2

## வில்வாதித் தைலம்

சாந்தமாம்வில்வாதித் தயிலங்கேளு
தாரணியில்வில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமாயிடித்ததனைப் ‡ பதக்குநீர்ந்
பருவமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கிப்
போந்தஎண்ணெய்நாழிவிட்டுச் சந்தனம்பலந்தான்
புகழானகிஷாயத்தி லரைத்துப்போடு
வாய்ந்தமெழுகானல் வடித்துக்கொண்டு
வாகாகமுழுகிவர வரிசைகேளே. 3

---

* தூணி - பத்தரை, அல்லது முப்பத்திரண்டுபடி.

† இறுகல் - பலப்படுதல்.

‡ பதக்கென்பது - இரண்டுபடி.

வரிசையாய்முழுகிவரப் பித்தம்போகும்
மைந்தனேகபாலத்தில் வெட்டைபோகும்
இருமைபெறஆக்கிவைக்கு மேகம்போகும்
இருகண்ணுந்தெளிவுண்டா மிருமல்போகும்
உரிசைபெறப்பித்தமெல்லா மோடிப்போகும்
உள்ளயர்ச்சியுட்சுரங்க ளொழிந்துபோகும்
தரைமீதிற்றளும்பிறக்குஞ் சூட்சஞ்சொன்னேன்
சம்பிரதாயமுமிதுதான் றரணியோர்க்கே. 4

## வேங்கைத் தைலம்

தரணியுள்ளமானிடர்கள் பிழைக்கவேண்டிச்
சாற்றுகிறேன்வேங்கையிட தயிலந்தன்னைக்
கரணியாம்வேங்கைபலம் பத்துவாங்கிக்
காய்ச்சிவிடுதூணிநீ * ரெட்டொன்றுக்கித்
திரணியுள்ளகிஷாயத்தை வடித்துக்கொண்டு
திறமாகளலும்ச்சம பலமொன்றுக
அரணியாங்கிஷாயத்திற் குழப்பிமைபோ
லழகானமெழுகுபத மானவாறே. 5

## பாக மூழ்கிவர

ஆனவைகேள்வாதமொடு சூலைபோகும்
அடர்ந்திட்டபித்தமது மாண்டுபோகும்
பீனிசங்கள்மண்டையிடி பிறட்டல்சீதம்
பெலமானவீக்கமுதல் வாங்கிப்போகும்
மேனியெல்லாங்காந்தியுண்டாம் விஷரோகம்போம்
வெகுவாகமுன்சொன்ன தயிலப்போக்கு
பூனிதமாய்ச்சொல்லிவிட்டேன் தெளிவாய்ப்பாரீர்
புகழானபற்பத்தின்போக்கு நூறே. 6

## வெட்டிவேர்த் தைலம்

போக்கானதயிலமொன்று சொல்லக்கேளு
புதிதானவெட்டிவேர் பலந்தான்பத்து

* எட்டொன்றென்றது - எட்டிலொருபாகம்.

நோக்காகவிடித்ததனைப் பதக்குநீரில்
நுணுக்கமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கி
வாக்காகவடித்ததனிலெண் ணெய்நாழி
வளமையாயதிமதுரம் பலந்தானென்று
தாக்காகஎண்ணெய்க்கு ளரைத்துக்கொண்டு
சாந்தமாய்மெழுகுபதந் தன்னில்வாங்கே. 7

வாங்கியேமுழுகிவர வரிசைகேளு
மாநிலத்திற்பீனிசங்கள் மண்டைகுலை
யோங்கியேகுட்டமொடு பீநீர்க்கோவை
யொளிமருவுங்கண்புகைச்சல் காதுமந்தம்
வாங்கியேயெய்ப்பிளைப்பு கைகாலோய்வு
வறிவுகெட்டதாதுசமு மிருமல்காந்தி
நீங்கியேபோவதற்கு மண்டலந்தான்
நேராகவொன்றைவிட்டு வொருநாளென்னே. 8

## வேம்பின் தைலம்

என்னவின்னமொருதயிலஞ் சொல்வேன்கேளா
யெளிதாகவேம்பினிட் பட்டைவாங்கி
உன்னவேகால்துலா மிடித்துக்கொண்டே
வொருதூணிநீர்விட் டொன்றாய்க்காய்ந்தாற்
சொன்னபடியெட்டொன்றாய் வடித்துவாங்கிச்
சுருதிபோலெண்ணெயிரு நாழிவிட்டு
நன்னயமாயேலக்காய் பலமிரண்டு
நலமானகிஷாயத்தி லரைத்துப்போடே. 9

அரைத்துடனேகாய்ச்சியது மெழுகதானால்
ஆற்றியேவடித்துவைத்து முழுகும்போது
நிரைத்திட்டவாதமெல்லா மெங்கேபோச்சு
நிசமானசூலையொடு குட்டரோகம்
திரைத்திட்டதமுதணையு மேற்கொடுப்புச்
செங்கரப்பன்புண்புரைகள் சேராதோடு
முரைத்திட்டதயிலத்தி னுறுதிமெத்த
வுத்தமனேதயிலமொன்று வுரைக்கின்றேனே. 10

## குறுந்தொட்டிவேர் தைலம்

உரைக்கிறேன் * குறுந்தொட்டி வேர்பலங்கே
    ளுத்தமனேயொருதுலாம் நிறுத்துப்போடு
நிரைக்கிறேன் தூணிநீ ரெட்டொன்ருக்கி
    நேரானஎண்ணெயிரு நாழிவிட்டுக்
கரைக்கிறேன்கிஷாயத்தி லரைத்துமைபோற்
    கசகசாஇருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கிறேனெனக்கென்ன வாதமெல்லாம்
    நடுநடுங்கியோடுமடா நயந்துபாரே. 11

## கொடுவேலித் தைலம்

நயமான † கொடுவேலி பலந்தான்பத்து
    நன்ருகவிடித்ததனைப் பதக்குநீரில்
வயமாகக்காய்ந்துலர்த்தி யெட்டொன்ருனல்
    வண்மையுடனல்லெண்ணெய் நாழிவிட்டு
நியமானபுன்னைக்காய் விசித ‡ மாவெண்
    ணெய்யுடனேசிரகமோர் பலந்தானிட்டு
சியமாகஅரைத்ததனைப் பாகிற்சேர்த்து
    சீரானமெழுகுபத மானவாறே. 12

ஆனதயிலம்வடித்தே முழுகும்போது
    ஆனந்தவாய்வினுட னந்தரமாம்வாய்வு
தேனமருங்குழலாள்கேள் வாதமெல்லாஞ்
    சிறுசொரியுஞ்சிரங்குகுஷ்டம் தினவும்போகும்
போனதொருஅரையாப்புக் கிரந்திசூலை
    புண்புரைகள்பிளவுமுதற் பொடிப்புவீக்கம்
நானென்னவந்தநோ யனைத்தும்தீரும்
    நல்லதொருதயிலமது நாடிப்பாரே. 13

---

* குறுந்தொட்டிவேர் - சிறுசாஞ்சோறி.
† கொடுவேலி - சித்திரமூலம் வேர்.
‡ ஆவெண்ணெய் - பசுவெண்ணெய்.

## சிரகத் தைலம்

பாரப்பாசிரகமும் பலமிரண்டு
பதமாகவிடித்துநீர் பதக்கிற்போட்டு
சீரப்பாஎட்டொன்ருய்க் கியாழம்வாங்கித்
தெளிவானநல்லெண்ணெய் படிதான்சேரு
காரப்பா * கார்போகி பலந்தானென்று
கஷாயத்திலரைத்ததனைக் கலக்கிக்கொண்டு
ஏரப்பாமெழுகுபத மாகவாங்கி
யியல்பாகமுழுகிவரக் குணத்தைக்கேளு. 14

குணமென்னசுரமெட்டு வாய்வுபத்து
குட்டமொடு † தழுதணையுங் குண்டலமுங்கேளு
மணமென்னவாந்திபித்தங் கிறுகிறுப்பு
வாயின்ருவந்ததொரு சோகையாண்டு
கணமென்னகண்குளிர்ச்சி உஷ்ணரோகம்
கபாலத்திற்கூடான கபநீர்க்கட்டு
பணமென்னநோய்தீர மருந்துமுண்டோ
பாறுலகின்முளைத்த மூலிகையிற்பாரே. 15

மூலிகையில்வெகுமூலி சஞ்சீவியாக
முளைத்ததேமலைதோறுங் காடுதோறு
சாலிகைக்குவெகுமூலி நாட்டுக்குள்ளே
சாதகத்தையறியார்கள் சண்டிமாண்பர்
ஆலிகைக்குளவயித்தியன்ருன் குணத்தைக்காணன்
ஆண்மையினல்வயிற்பிழைக் கவலைவான்மட்டை
கோலிகைக்குள்மனதுவைக்க வேண்டாம்சொன்னேன்
குறைவானவிருநூற்றின் மறையைப்பாரே. 16

## சூரித் தைலம்

நூற்றிலேயின்னமொரு தயிலங்கேளு
நுணுக்கமுடன் ‡ சூரியதுதுலாமுங்கால்தான்

---

* கார்போகி - கார்போகிஅரிசி.

† தழுதணை - மேகத்தடிப்பு. ‡ சூரி - எருக்கு.

* ஊற்றுவேனீர்பதக்கி லிடித்துப்போடு
வொருவிறகாற்காய்ந்துலர்த்தி யெட்டொன்றாறல்
ஆற்றியேவ்டித்துடனே யெண்ணெய்நாழி
யதில்விட்டுக்காக்க வகைசாற்றக்கேளு
சோற்றிலேயருபிரண்டைக் காயும்நாழி
சுக்கதிலேபலமொன்று மரைத்துச்சூட்டே. 17

சூட்டியேமெழுகுபத மாகவாங்கித்
தோணவேயேழ்கிவர மண்டலந்தான்
ஓட்டிவிடுங்கிரந்திகுட்டஞ் சூலைகுன்மம்
உண்டுவிடக்கிராணியெல்லா மூள்மூலத்தை
மாட்டியேநீர்களெல்லாம் வாங்கிப்போகும்
வாங்காதபீனிசமு மண்டைசூலை
தாட்டிகமாய்த்துரத்திவிடுந் தயிலப்போக்குஞ்
சஞ்சீவிபோலவுந்தான் சாற்றினேனே. 18

## கீழ்க்காய் நெல்லித் தைலம்

சாற்றவின்னம்வகைகேளு கீழ்க்காய்நெல்லி
சமூலமாய்க்காற்றுலர் மிடித்துப்போடு
ஆற்றுநீர் தூணிவிட்டுக் கியாழஞ்செய்து
அப்பனேயெட்டொன்றாய் வடித்துவாங்கி
வார்த்திடுவாயெண்ணெய் படிதானிரண்டு
வாகானசர்க்கரையின் பலந்தானொன்று
ஏற்றியேவடித்துவிடு மெழுகதாக
இயலுடனேமுழுகிவரத் தீரும்நோய்கேள். 19

கேளப்பாபித்தமென்ற தெல்லாம்போகும்
கிறுகிறுப்புதலைசுழற்றல் வாந்திதீரும்
நாளப்பாரத்த மெரிச்சலோடு
நலமானஎய்ப்புளைப்பு பித்தரோகஞ்
சூளப்பாமஞ்சளைப்போல் நீர்சுருக்குஞ்
சுற்றலுடனுஷ்ணங்கள் சூடெல்லாம்

---

* ஊற்றவேனீர் - சாப்புசபலம்.

வேளப்பாமேலெரிவு கைகால்காந்தல்
வெளுத்தசடங்கறுப்பாக்கும் விதத்தைப்பாரே. 20

## சங்கம்வேர்த் தைலம்

விதமானசங்கம்வேர்த் தயிலம்கேளு
வெட்டிவந்தகாற்றுலர இடித்துப்போட்டு
பதமானதூணிசல மெட்டொன்றுக்கி
பகருமெண்ணெயிரண்டுபடி பண்பாய்விட்டு
அதமானமிளகுபல மரைத்துப்போட்டு
அப்பனேமெழுகுபத மானவாறே
சுதமாகவடித்ததனை முழுதும்போது
சொல்வதென்னகுட்டமொடு சொரிசிரங்கே. 21

சிரங்குடனேகிராந்தியொடு சூலேரோகஞ்
செங்கருப்பான்வண்டுகடி சிலவிஷங்கள்
குருபோலவழங்குகின்ற சயங்களோடு
குத்திருமல்வாதசயங் கூடியோடும்
வரங்கொடுக்குஞ்சங்கரர்சொல் வார்த்தைகேட்டு
மகமாயிசொல்லக்கேட்டு வழுத்தினேன்யா
னரங்குமுடனின்னமொரு தயிலங்கேளு
அமுக்குராவேர்பலந்தான் பத்துவாங்கே. 22

## அமுக்குருவேர் தைலம்

வாங்கியேபிடித்ததனைப் பதக்குநீரில்
வடித்தெண்ணெய்பலமொன்று வதனிற்சேர்த்து
ஓங்கியதோரெலுமிச்சம் பழச்சார்நாழி
யொக்கவிட்டுமெழுகுபத முருட்டிப்பார்த்து
தூங்கவேவடித்ததனை வைத்துக்கொண்டு
சுகமாகமுழுகிவரச் சுகத்தைக்கேளு
பாங்கியேபீனிசங்கள் தவிர்ந்துபோகும்
பாரிலுள்ளமண்டையிடி பறந்துபோமே. 23

## இஞ்சித் தைலம்

பறப்பதற்குபின்னமொரு தைலங்கேளு
பச்சையிஞ்சிகால்துலாம் பரிந்திடித்து
சிறப்புடனேபிழிந்துவடி கொண்டுநன்றாய்த்
தெளிவானநல்லெண்ணெய் படிதான்விட்டு
உறப்புடனே ஆவின்பாற் படிதான்சேர்த்து
வுறுதியாய்மெழுகுபத மாகவாங்கி
நிறப்புடனேமுழுகிவரப் பருவமாகி
நிசமாகத்தீருநோய் நிகழ்த்தினேனே. 24

நிகழ்த்துகிறேன்மண்டையிடி சூலைவாதம்
நிலைகொண்டபீனிசங்க ளிரைப்பிளைப்பு
புகழ்த்துகிறேன்சூலையொடு வாதவாய்வு
பொல்லாதகால்கடுப்பு மேல்நோயெல்லாம்
அகலுமேகுட்டமென்ப தற்றுப்போகும்
அசதியிருமலுமுடனே நெஞ்சின்கத்ரி
செகமதனில்நாடாம லோடிப்போகுஞ்
செம்முள்ளியெண்ணெய்தனைச் செப்புறேனே. 25

## செம்முள்ளித் தைலம்

செப்புகிறேன்செம்முள்ளி பலம்நூறப்பா
சிறப்பாக * மூலத்தோடிடித்துப்போட்டு
ஒப்புகிறேன்தூணிநீ ரதிலேவிட்டு
வுருக்கவேயிடையொன்று யுகந்துகாய்ச்சி
அப்புகிறேனதைவடித்து யெண்ணெய்நாழி
யதில்விட்டுமெழுகுபத மாகவாங்கி
நப்புகிறேன்முழுகிவருங் காலந்தன்னில்
நன்றாகத்தீருநோய் நவிலக்கேளே. 26

நவிலக்கேள்சயமீளை யிளைப்புரோகம்
நாடாதுமந்தார காசத்தோடுங்

* மூலத்தோடு - செம்முள்ளி வேருடன்.

கவிலக்கேள்கசநோவு குன்மநோயுங்
  கண்ணீரைப்பாச்சலுடன் விக்கல்தானும்
புவியில்வரும்புண்புரைக ளெல்லாந்தீரும்
  பொருந்துமரையாப்புக்கிரந்தி யண்டவாதம்
நிவியக்கேள்விக்கமொடு விஷபாகந்தான்
  நீங்குமடாயித்தயில முருக்கும்போதே. 27

## சாரணைத் தைலம்

உருக்கவேயின்னமொரு தைலங்கேளு
  வுறப்பான * சாரணையின் பலந்தான்பத்து
இருக்கவேயிடித்ததனைப் பதக்குநீர்விட்
  டெட்டொன்றாய்க்காய்ச்சியபி னெண்ணெய்நாழி
மருக்கவேகொதித்ததனை வடித்துவாங்கி
  மகத்தானமெழுகுபத மானவாறே
குருக்கவேவடித்ததனை முழுகும்போது
  குடிபோகும்வாதமொடு வாய்வின்கூறே. 28

## இருவேலி தைலம்

கூறுக † யிருவேலி பலந்தானாறு
  கொத்தோடேதரித்திடித்துத் தூணிநீரில்
பேறுகயிட்டெரித்து யெட்டொன்றாக்கிப்
  பிறகுயெண்ணெயதில் நாழிநீதான்சேர்த்து
வீறுகக்கொதித்துவற்றி மெழுகதானால்
  மெய்யிலேபூசியதை முழுகும்போது
தேறுதசடலங்கள் தேறிப்போகும்
  ஜெனித்தகிறுகிறுப்பும்போங் தெளிவாயாயே. 29

## அகிற்கட்டை தைலம்

ஆய்ந்தவகிற்கட்டைகளின் பலந்தான்கேளு
  ஐம்பதுதான்வாங்கியதைத் தூளாய்ப்பண்ணி

---

* சாரணை - சாரணத்தி யெனவுமருவும்.
† இருவேலி - வெட்டிவேர்.

வாய்ந்தஜலந் தூணிவிட் டெட்டொன்றுக்கி
வனமானநல்லெண்ணெ யதிலேநாழி
பாய்ந்திட்டுமெழுகுபத மானபோதிற்
பக்குவமாய்வடித்துநீ ரூழ்குங்காலை
வேய்ந்த * நீர்தோஷமெல்லாந் தீரும்பாரு
மேகங்களகலுமின்னம் விளம்பக்கேளே. 30

## அறுகம்வேர் தைலம்

விளம்பக்கேள றுகம்வேர் பலந்தானூறு
மெய்யுள்ளபச்சையெல்லாந் தள்ளிப்போட்டு
குளம்போலாமுறலில்வைத் திடித்துக்கொண்டு
† கோதில்ஜலமொன்றுபடி யதிலேவார்த்து
குழம்பாகக்கரைத்ததனை யெட்டொன்றுக்கிக்
குணமாகவடித்தெண்ணெய் நாழிவிட்டு
பழம்போலேமெழுகுபத மானவாறில்
பதனமாய்வடித்ததனை முழுகுவாயே. 31

முழுகியேவரும்போது குணத்தைக்கேளு
‡ மூலத்திற்சூடுடனே கபாலச்சூடு
தழுகியேபித்தமெல்லாந் தவறுண்டேபோம்
தப்பாதுகுன்மங்க ளெட்டுமோடும்
அழுகியேவருங்கிரந்தி சூலைநீர்கள்
ஆனதொருவயிற்றுவலி நெஞ்சிரேவு
கொழுகியதோர்நீர்க்கடுப்பு மேல்வரட்சை
கோலித்தவக்கினியுங் குளிர்ந்துபோமே. 32

## கொடுப்பைத் தைலம்

குளிரவேவகையொன்று சொல்லக்கேளு
$ கொடுப்பைநீர்படிநாழி யெண்ணெய்நாழி
தளர்வானகோஷ்டத்திற் பலந்தானொன்று
தன்னுக்குட்பசுவின்பால் விட்டேயாட்டி

---

* நீர்தோஷம் . சேத்திற்கொண்ட ஜலதோஷம்.

† தண்ணீர் - நல்லநீர். ‡ மூலம் – ஆசனக்கடுப்பு.

$ கொடுப்பை - பொன்னாங்காணி.

யெளிதாகக்கரைத்துவிடு மெழுகுபோலே
யினிதாகவடித்தபின்பு யியல்புகேளு
நளினமாய்முழுகிவர மண்டலத்தில்
நலமாகத்திருநோய் நவிலக்கேளே. 33

கேளப்பாபித்தமெல்லாங் கெடிகெட்டோடுங்
கிறுகிறுப்புமண்டையிடி செயநீர்த்தாகம்
மாளப்பாவுஷ்ணங்க ளுள்சுரங்கள்
வளருமென்றமேலெரிவு கைகால்காந்தல்
தேள்போன்றகண்ணெரிவு சிரசிற்சூடு
தேகவலியெரிகுன்மங் தீர்ந்துபின்னும்
வாள்போன்றகண்ணுக்குத் தெளிவுண்டாகு
மகத்தானதயிலமிது வணங்கிச்செய்யே. 34

## கையாந்தகரைத் தைலம்

செய்யவேயின்னமொரு தைலங்கேளு
செகத்திலுள்ள * கையான்சார் படிதானென்று
வெய்யவேகற்குழஞ்சாற் படிதானென்று
விளம்புகிறேனெல்லிக்காய் சார்படிதான்
உய்யவேபடியொன்று மூன்றுங்கேளு
வுருக்கவேயெள்ளெண்ணெய் படிதானென்று
மெய்யானசாதிக்காய் பலந்தானென்று
† வியனுகவேயிடித்து அரைத்துப்போடே. 35

போட்டதனைமெழுகுபதந் தன்னில்வாங்கிப்
புகழாகவேவடித்து முழுகும்போது
தாஷ்டிகமாந்தலைநோவு கண்ணோவோடு
தளர்வானசெவிநோவு சார்ந்தபித்தம்
ஓட்டிவிடுமுஷ்ணங்கள் பீனிசங்கள்
ஒழிந்துவிடுமென்றுமுனி யுரைத்தவாறும்
நாட்டிலுள்ளதின்னமொரு தைலஞ்சொல்வேன்
நலமான ‡ சவரிபலம் நூறுவாங்கே. 36

---

* கையாந்தகரை - கரிசிலாங்கண்ணி.

† வியனுக - சமமாக. ‡ சவரி - குறட்டை.

## சவரித் தைலம்

பலம்நூறுதானிடித்துத் தூணிநீரில்
பக்குவமாய்ப்போட்டுவற்றி யெட்டொன்ருக்கிச்
ஜலமதனைவடிகொண்டு யெண்ணெய்நாழி
சாந்தமுடன்விட்டிரண்டுஞ் சேர்த்துக்கொண்டு
நலமானகருஞ்சீரகம் பலந்தானென்று
நாட்டியேயரைத்ததனுட் கரைத்துக்காய்ச்சிப்
பெலமானமெழுகுபத மானவாறே
பித்தர்களேவடித்துரைந்து முழுகுவாயே. 37

வாயானவாதமெங்கே குட்டமெங்கே
வாதத்தினலெழுந்த கரைப்பானெங்கே
காயானகாய்ப்பெங்கே கழலையெங்கே
கண்டத்தில்விக்கமெங்கே வாதமெங்கே
நோயானநோயெல்லா மகன்றுபோகும்
* நுணுக்கமாய்த்தைலமொன்று நவிலக்கேளு
சேயான † சென்னகரப் பட்டைதானுந்
தீவிரமாய்ப்பலம்நூறு தாக்கிடாயே 38

## சென்னகரப்பட்டை தைலம்

தாக்கியேயிடித்ததனைப் பதக்குநீரில்
சாதகமாய்ப்போட்டுலர்த்தி யதையெட்டொன்றாய்
ஆக்கியேயென்னெண்ணெய் படிதான்விட்டு
அதிற்பாதிவேப்பெண்ணெய் கூடச்சேரு
நோக்கியேவசம்புபல மரைத்துப்போடு
நுணுக்கமாய்மெழுகுபத மானபோதில்
தூக்கியேவடித்ததனை முழுகும்போது
தொலையாதவாதமெல்லாந் துலைந்துபோகும். 39

## இலுப்பைப்பட்டை தைலம்

போகவேயின்னமொரு தைலங்கேளு
புகழானவிலுப்பைப்பட்டை பலமோநூறு

---

* நுணுக்கம்-சொல்பம். † சென்னகரைபட்டை-செக்காவற்பட்டை.

ஆகவேயிடித்ததனைத் தூணிநீரில்
அன்புடனேபோட்டுடனே யெட்டொன்ருக்கி
வேகவேயெண்ணெய்படி பத்துவிட்டு
வேப்பெண்ணெயதிற்பாதி கூடச்சேரு
* நாகவல்லிச்சாருடனே படிதான்சேரு
நன்ருகமெழுகுபத மானவாறே. 40

பதமாகமுழுகிவரத் தீரும்நோய்கள்
பன்னியகபாலச்சூடும் பறந்துபோகும்
இதமாகயின்னமொரு தைலங்கேளு
யிடித்திடுவாயிலுப்பைப்பட்டை பலந்தானூறு
இதமாகத்தூணிநீ ரதனில்விட்டு
யெட்டொன்ருய்க்காய்ந்தபின்பு வடித்துக்கொண்டு
சுதமானயெள்ளெண்ணெய் படிதான்விட்டு
சுந்தரமாமஞ்சத்தூள் போட்டுக்கிண்டே. 41

கிண்டியேவடித்திடுவாய் மெழுகதானல்
கேடிலங்கியோடிவிடும் வாதமெல்லாம்
பண்டிதற்குயிந்தமுறை பாடமுண்டோ
பார்ப்பதற்குவெகுசூருக்கம் பரிந்துபாரு
கண்டிதமாய்ச்சொல்லிவிட்டேன் சுருக்குமெத்த
கதிகெட்டநோயெல்லாந் தீரவேநெய்
உண்டுகொண்டுஇருப்பதற்குச் சொர்னமுண்டே
யுறுதியிந்தநூல்முறையை யுன்னிப்பாரே. 42

## பொன்னாங்கன்னி தைலம்

உன்னியேயின்னமொரு செய்திகேளு
உள்ளுக்குத்தைலமொடு கிலுத்தஞ்சொல்வேன்
கன்னியாம்பொன்னாங்காணிவேர் பலந்தானென்று
கனமானவெட்டிவேர் வெலுமிச்சம்வேர்
புன்னியே † ஓரிதழ்வேர் சிறுகீரைவேர்
புகழாகவகைக்குவொரு பலந்தான்சேர்த்துப்

* நாகவல்லி - வெற்றிலை. † ஓரிதழ்வேர் - தாமரை.

பன்னியேபால்வார்த்து அரைத்துநெய்யிற்
படிரெண்டுக்குள்ளிட்டுக் காச்சுவாயே. 43

காச்சியேயுட்கொள்ளக் கரண்டிவிதம்
கனரோகம்பதினெட்டுங் காணுதோடும்
மாச்சிதேவுட்சுரங்கள் கண்டுபோகும்
மனுகாவுட்டிணங்கள் தாகம்மேகம்
போச்சுதேவரட்சையொடு வுஷ்ணரோகம்
புண்ணுனஅச்சரங்கள் போகுஞ்சொன்னேன்
ஏச்சுதேயென்றுதே சாதிக்காயு
மியலானவதிமதுர மாசிக்காயே. 44

## சதாவேரிக் கிருதம்

காயொன்றுவகைகளிலே பலமொன்றாகக்
கரைத்திடுவாய்காச்சமுன்னே நெய்க்குள்ளாக
தாயென்றுயின்னமொரு கிருதஞ்சொல்வேன்
* சதாவேரிக்கிழங்கினிட சார்படிதான்
வாயென்ற † திரிகடுகு ‡ திரிபலாதி
வகைவிதங்களஞ்சியொன்று நெய்யோநாழி
யேயென்றுயெரியிலிட்டு மெழுகதானல்
யிறக்கியேவைத்திடுவா யியல்புதானே. 45

இயலாகக்குடித்திடுவாய் கரண்டிவிதம்
எடுத்ததொருகரப்பனெல்லா மிரங்கிப்போகும்
முயல்வானநீர்தோஷ முழுதும்போகும்
முழங்குகின்றவாயுவுட னிறைச்சல்தீரும்
செயலானபித்தமொடு சிலேற்பனங்கள்
சனியிருமல்கிறுகிறுப்பு சொரியாமாந்தம்
மயலானகிறுகிறுப்பு மற்றுப்போகும்
மடவார்களின்னமொரு கிருதங்கேளே. 46

---

* சதாவேரி - நீர்விட்டான், அல்லது தண்ணீர் விட்டான்.

† திரிகடுகு - சுக்கு, திப்பிலி, மிளகு.

‡ திரிபலாதி - தான்றி, நெல்லி, கடுக்காய்,

## திரிகடுகு திரிபலாதி எண்ணெய்

கிருதமாந்திரிகடுகு திரிபலாதி
  கேளப்பாவகைக்குவொரு பலந்தான்வாங்கி
நருதமாஞ்சலம்பத்துப் படியினுள்ளே
  நன்றாகஇடித்துவற்றி யெட்டொன்றாக்கி
விருதமாய்ப்போகாமல் மெழுகதாக
  வியனாகவடித்ததனை வைத்துக்கொண்டு
சிறுகவேகரண்டிநிறை கொள்ளும்போது
  தீருகின்றவியாதிதனை செப்பக்கேளு. 47

செப்புகின்றசீரகமும் ஓமங்கூட்டிச்
  சீராகச்சூரணித்து வைத்துக்கொண்டு
இப்புவியில் * வெருகடிதானெய்யிற்கொள்ள
  ஈரெட்டுக்கரப்பனொடு சிலந்திகுட்டம்
நப்புகிறேன்கிராணியொடு அசீரணங்கள்
  நாடோறுநாடாது புவியுளோர்க்கு
மெய்ப்படவேயெந்தனது தாய்சொல்லாலே
  இன்னமொருகிருதவகை யியம்பக்கேளே. 48

## தூதுவளை கிருதம்

இயம்பக்கேள்தூதுவளை பலந்தான்பத்து
  இயல்கண்டங்கத்திரியும் பலந்தான்பத்து
தயவானதுளசியது பலந்தான்பத்து
  சாதகமாய்த் † தோடையிலை பலந்தான்பத்து
நயம்பெறவேவிஷ்ணுகிரந்தி பலந்தான்பத்து
  நன்றாகப் ‡ பிரமியாது பலந்தான்பத்து
செயமாகயிதையிடித்துத் தூணிநீரிற்
  சேரவேகாய்ச்சியிதை யிறுத்துவாங்கே. 49

இருத்திடவே § யெண்ணெயொடு $ நெய்யுங்கேளு
  யிதமானதிப்பிலி சித்திரத்தைரண்டும்

---

* வெருகடி - பூனையடி. † தோடையிலை - ஆடாதோடை. ‡ பிரமியாது - பிரமமூலி. § எண்ணெய்-நல்லெண்ணெய். $ நெய்-பசுவின் நெய்.

வருத்திடவேவகைக்கு அரைபலமதாக
வடிமெழுகுபதமரைத்துச் சலத்திற்கிண்டி
முறித்திடவேபோகாமல் வடித்துக்கொண்டு
முக்கியமாங்கரண்டிநிறை யெடுத்துக்கொள்ளு
உருத்திடவேகொண்டாக்காற் றீராநோயும்
உற்றதொருயிருமலெல்லா மோடிப்போகும். 50

ஓடிப்போந்தேன்கூட்டிக் கொண்டாயானால்
உறுசயங்களிளைப்பீளை துர்ப்புகக்கல்
ஓடிப்போம்வாய்வோடு கெட்டெல்லாமே
ஒவ்வாமலோடிப்போம் ங்ளினமாகும்
தேடிப்போந்திரிகடுநெற் பொரியுங்கூட்டித்
தேனிலேகொண்டுவிடு கிருதஞ்சேர்த்து
தேடிப்போங்கொண்டிடவே சொன்னநோய்கள்
க்ஷேமமாமென்றருளச் செய்குவீரே. 51

## ஜன்னிக்கு வசம்புத்தைலம்

செய்தபடிசன்னிக்குத் தயிலங்கேளு
செப்புகிறேன்வசம்புடனே * வெள்ளுள்ளித்தான்
உய்தமுள்ள † நிலவேரு ‡ முசுறுமுட்டை
வுற்பனமாந் $ தண்டுடனே கோழிமுட்டை
நெய்நாழிவேப்பெண்ணெய் கூடக்கூட்டி
நிறையாகவகைக்குவொரு பலமாய்ச்சேரு
செய்கின்றஆமணக்கி னெண்ணெய்நாழி
சிறப்பாகவிட்டதிலே சேர்த்துக்கொண்டு. 52

கொண்டுவிடயெண்ணெய்க்குக் க்ஷாயங்கேளு
கூறுகச்சுக்கிடித்துக் கிளிபோற்கட்டிக்
கிண்டிவிடுஞ்சுடவைத்துப் பின்புமைந்தா
கிரமமாய்க்குடித்திடவே சன்னிவாதஞ்

* *வெள்ளுள்ளி - வெள்ளைப்பூண்டு.*
† *நிலவேர் - நாக்குப்பூச்சி.*
‡ *முசறு - எறும்பு.* $ *தண்டு - மூங்கில்.*

சிண்டுசெய்யும்வலியஞ்சுஞ் சிதறிப்போகுந்
 தீராதபிணிகளுக்கு வுள்ளேகொள்ள
இன்றுவிடநாளைக்குத் தீருமென்றே
 யெளிதாகவித்தயில மியம்பினேமே. 53

## ஏருக்கிலைக் குழம்பு

இயம்பிடவேவகையொன்று சொல்லக்கேளு
 யெருக்கிலைபாலுழக்கு கள்ளிப்பாலுழக்கு
சுயமானநவாச்சாரங் * கழஞ்சுபத்து
 சுபமாகவிட் டரைத்து மெழுகதாக்கி
நயம்பெறவேஆமணக்க னெண்ணெய்சேர்த்து
 நலமான † செம்பதிலே வைத்துக்கொண்டு
செயமானபெருவயிறு மகோதரங்கள்
 திறமானநீராம்பல் பாகமென்றே. 54

பாகமாய்பிகக் கிளறியானபின்பு
 பகருகின்ற சுண்டைக்காய்வீதங்கொள்ள
வேகமாந்தின்றவுடன் பெந்தந்தானும்
 விட்டுவிடவேணுமென்றால் வென்னீர்கொள்ளு
நாகமாம்விஷம்போன்ற விஷநீரெல்லாம்
 நாடாதுபேதித்து வாங்கிப்போகும்
ஏகமாமருந்துநீ கொண்டாயானால்
 யேழுநாட்பாற்கொள்ள யிதமுந்தானே. 55

## குப்பைமேனிச் சூரணம்

தானென்றமேனிச் சூரணமேசெய்து
 தான்கரியசீரகமுஞ் சூரணித்து
நானென்றநாற்பதுநாள் கொள்வீராகில்
 நாடாதுவாய்வோடு தத்தமெலாந்
தீனென்ற ‡ தீபனங்கள் நன்றாய்வாங்கும்
 க்ஷணத்திலேமந்தமெல்லாஞ் சிதறுண்டேபோம்

---

* கழஞ்சு - ஒன்றேகால் விராகனிடை, அல்லது 40 குன்றிமணி யிடை.

† செம்பு - செம்புபரணி. ‡ தீபனம் - பசியெடுத்தல்.

போனென்ற * சிலேவிஷங்க ளெல்லாந்தீரும்
புதுமைசேரக்கினியின் பொடியிதாமே. 56

## சீரகப்பொடி கிருதம்

பொடியானபொடியொன்று சொல்லக்கேளு
புகழானசீரகமும் பலந்தானென்று
செடியானவொரு † சன்னப்பொடி பலந்தான்
சிறந்தசர்க்கரையிவையோ டொன்றுய்ச்சேர்த்து
வடிவாகவேவடித்து வைத்துக்கொண்டு
வளமான ‡ நறுநெய்யிற் குழைத்துக்கொள்ள
துடியானவூஷ்ணத்தோ டுள்ளிணேய்கள்
சுருக்கானநீர்கடுப்பு பிரமேகங்கள். 57

மேகமுடனுள்காய்ச்ச லெரிவுகாந்தல்
§ வியனுகவெரித்த குன்மமெல்லாந்தீரும்
போகமுறுமெலும்புருக்கிப் போதுத்துப்போம்
பொருக்காதநீர்த்தாகம் புண்ணுநெஞ்சில்
வேகமுறும்வாய்நாற்ற மேல்நாற்றங்கள்
விட்டோடிவிடுவதற்கு விருந்துபோடு
கூகைநீகருஞ்சீரகஞ் சாதிக்காயுங்
கூட்டியேஅவின்குரு சாணியோடு. 58

## குருசாணிப் பொடி

குருசாணிவகையொன்று பலமொன்ருகக்
கூட்டியேசரிநிறையாய் வாங்கியேதான்
நிருசாணியாக்வே வறுத்துக்கொண்டு
நேராக $ வேம்பின்சூரணமுஞ்சேர்த்து
உருசாணிவானைப்பு அவியவிட்டு
உருகவேபிணிநாசந் தன்னிற்கொ...

* சிலேவிஷம் - ஆறுமல் சிலே நீரொழுகும் புண்.
† சன்னப் பொடி - சூரணம். ‡ நறுநெய் - பசுநெய்.
§ வியனுக - வெப்பமாக. $ வேம்பு - ...

DEC 1981

முருசாணியானதொரு கடுப்புளைச்சல்
　மூலத்திற்கிராணியொடு முழங்கும்வாய்வு. 59

## கொடுவேலிச் சூரணம்

முழங்கவேவகையொன்று சொல்லக்கேளு
　மூதண்டைக் * கொடுவேலி சூரணித்து
விளங்கவேபடியொன்று † சீனப்பாவும்
　விதமாகப்படியொன்று கூடக்கூட்டி
களங்கக்கார்கோலரிசி படியுமொன்று
　கருஞ்சீரகத்துட னற்சீரகமுங்கூட்டி
புளங்கவேவகையொன்று பலமொன்ருகப்
　புனிதமாய்ச்சூரணித்துப் புகழ்ந்துவையே. 60

வைத்திட்டசூரணந்தான் றேனிற்கொள்ள
　வருஞ்சூலைக்கிரந்தியொடு வாதவாய்வும்
வெற்றிட்டவண்டுகடி ‡ வெளுப்புவெட்டை
　விஷகடியுமேல்கரப்பன் விரைந்துபோகும்
பற்றிட்டமேகவகை பறந்துபோகும்
　பான்மையுடனுடம்பெல்லாம் பாருபாரு
கைத்திட்டமாகவே சொல்லிவைத்தேன்
　கனமானமிளகுநீர் கஷாயங்கொள்ளே. 61

## கெர்ப்பமில்லாதவர்களுக்குக் கெர்ப்பமுண்டாகுதல்

கொள்ளவேமண்டலத்தில் தீமைநோய்கள்
　குணமாகுமின்னமொரு வகையைக்கேளு
பிள்ளையில்லாதவளுக்கு மருந்துசொல்வேன்
　பேய்க்கொம்மட்டிவித்து நேர்வாளந்தான்
உள்ளபடிசமனுய்க் குளித்தைலம்வழங்கி
　யுறுமஞ்சட்பொடியதனிற் சேர்த்துக்கொண்டு
கள்ளமின்றிமத்தித்துக் கொண்டுட்கொண்டால்
　கன்னியவளம்மாதங் கெர்ப்பமாவாள். 62

---

* கொடுவேலி - சித்திரமூலம்.

† பாவு - போடு.　　‡ வெளுப்பு - பாண் அல்லது சோகை.

கெர்ப்பமதுமாவதற்கு மருந்தும்வேறே
கிலேசிக்கவேண்டாங்கா ணேயுந்தீரும்
செப்பமுடன்மருந்துகொண்டால் வெந்நீர்கொள்ளு
தெளிவாகப்பேதிக்குங் கஞ்சிகொள்ளும்
உற்பமாய்மூன்றுநாட் குளித்தநாட்தொட்
டுறுதியாய்க்கொண்டுவிடு வொருபோதுண்ணு
அற்பமென்றுநினையாதே யுறுதிப்பாரும்
அதைவிட்டுயின்னமொரு மடைவுகேளே. 63

## கிராணிப் பேதிக்கு லேகியம்

அடைவானகொம்பரக்குந் தரிக்க
மானகுருசாணியபின் சாதிக்காயுந்
திடமாகச்சூரணித்து நல்லெண்ணெய்க்குள்
திரட்டியேகொண்டுவிடு சிறுபுன்னைக்காய்
குடலோடேபற்றுகின்ற வயிற்றுளைவுங்
குத்துகின்றகுறுக்குவலி மூலச்சூடு
கடல்போலேவந்ததொரு கடுப்புந்தீரும்
கண்டிமுள்ளபுண்ணுகுங் கண்டவாரே. 64

## காதுக்கு எண்ணெய்

கண்டபடிசெய்யிலொன்றி சொல்லக்கேளும்
காதுக்குயெண்ணெயொன்று கட்டுதற்கு
விண்டபடி * முசுறுமுட்டை † பூநாகந்தான்
வெற்றியுள்ளநண்டிறச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடிகோழிமுட்டை வசம்பு ‡ குக்கில்
குணமாகவகைக்குவகை கழஞ்சுகூட்டிப்
பண்டருளும்வேப்பெண்ணெய் தன்னிற்சேர்த்துப்
பதமாகக்காச்சியதைக் காதிற்சேர்த்து. 65

பாச்சியேயடைத்திடுவாய் பத்துநாளில்
பளிச்சென்றுசெவிகேழ்க்குஞ் சீழ்ப்பாச்சர்போம்

---

* முசுறுமுட்டை - எறும்புமுட்டை. † பூநாகம் - நாக்குப் பூச்சி. ‡ குக்கில் - குக்கிலியம்.

மாச்சுதேகுத்துளைச்சற் பூச்சிச்சாகும்
மடைப்புவிடுங்காதிரைச்ச லதுவுந்தீரும்
வாச்சுதேயின்னமொரு வரிசைகேளு
வாயிலுள்ளவியாதியெல்லா மகன்றுபோக
பாச்சையாபாகத்தில்முன் தைலமஞ்சிப்
பச்சையாய்த்தின்ருெதுக்கப் பற்குத்துப்போம். 66

## பல் குத்துக்கு

குத்துவிடுமுட்பிரண்டை வேர்கியாழங்
கொப்பளிக்கப்பல்லரனைத் தந்தசூலை
அத்துப்போமசைந்தபல்லு முறத்துநிற்கு
மழுக்கெல்லாந்தீர்ந்துவிடு மின்னங்கேளு
செத்துப்போம்நாக்கில்வருஞ் சிங்கிரோகந்
தீரவொருமருந்துசொல்வேன் சிவவேம்பின்வேர்
முத்துப்போல்பல்விளக்கும் பத்துநாளில்
முறையானமேகமெல்லா முழுதும்போமே. 67

முழுதுமேபோகவொரு மருந்துசொல்வேன்
மூதண்டவெள்வேருங் * குமிழ்தான் † வன்னி
பழுதில்லாமருந்துடனே குண்டலமாம் ‡ பாலை
பழுத்தயெருக்கிலையுடனே பலாசுகாரை
தொழுதுகட்டையது சமனுய்த்தூக்கித்
தூணிநீர்தனிற்போட்டு யெட்டொன்ருக்கிப்
பழுதுவராமற்காச்சி வடித்துக்கொண்டு
பாங்கானசம்பிரச் சாறுநாழி. 68

நாழியுடனெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நலமானதுருசு வெள்ளைகுந்திரிக்கம்
வேழியுடன்வகைநாழி கழஞ்சுவீதம்
விதமாகப்பொடித்திட்டு வடித்துக்கொண்டு
கோழியிடரத்தம்விட்டுக் கொப்பளிப்பாய்
குவடுகளிற்கட்டுமுதற் குலைந்தபல்லும்

---

* குமிழ் - நிலக்குமிழ். † வன்னி - கொடிவேலி.
‡ பாலை - வெட்பாலை.

வாருயென்னவீக்கமுதற் பிணிகளெல்லாம்
வாங்கிப்போம்வளமான வரிசைபாரே. 69

பார்ப்பதற்கு இன்னமொரு வரிசைகேளு
* பாகவிலைச்சாறுடன் † கொம்மட்டிக்காய்ச்சாறு
ஏற்பதற்குவேம்பினிட இலையின்சாறு
மெருக்கிலைச்சாற்விளிப்பாலைச் சாற்வகைக்குநாழி
சேர்ப்பதற்குவேம்பெண்ணெ யாமணக்கினெண்ணெய்
திரளவேமெழுகுபதஞ் சேரவாங்கி
தாக்குடனேகாசிடையாய்க் கொண்டபேர்க்குச்
சலக்கட்டும் வலக்கட்டுங் கிருமியோடே. 70

கிருமியென்றகிருமியெல்லாங் கண்டுபோகுங்
கெர்ப்பத்தின்கிருமியெல்லாங் கெதிகெட்டோடும்
வருமியென்றவாய்வெல்லா மண்ணுய்ப்போகும்
வாதமொடுமலக்கட்டுத் திரண்டவாய்வும்
ஒருமித்தநோய்களெல்லா மோடிப்போகும்
உலகத்தில்வெகுசுருக்கு விரைத்துப்பாரும்
கருமியென்றவகையெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கஷாயத்தின்விதங்களையும் காட்டுறேனே. 71

## குறுந்தொட்டிவேர்க் கிஷாயம்

காட்டுறேன் ‡ குறுந்தொட்டி வேர்க்கிஷாயந்தான்
காயேலஞ்சீரகமுங் காலாய்க்கூட்டி
ஓட்டுகின்றஇருநாழி நீரில்விட்டு
உழக்காகக்காய்ச்சியே யிருபோதுண்ண
மூட்டாமல்மூன்று நாட்கொண்டாயானல்
உட்சுரமும்மூல வாய்வனைத்துமப்போ
மீட்டுவிடும்பித்தமெல்லாம் வாந்திதீரும்
விளம்புகிறேன்இன்ன மொருவிதங்கள்பாரே. 72

---

* பாகவிலை - பலாவிலை.

† கொம்மட்டி - புளிமாதுளை.

‡ குறுந்தொட்டி - சிறுகாஞ்சொறி.

## வெட்பாலைக் கியாழம்

விதமென்னவெட்பாலை சீரகமுங்கூட்டி
வீராகவகைக்குக் கால்பலமதாக
இதமுடனேயிருநாழி நீரில்விட்டு
எட்டொன்றாய்க்காய்ச்சியே யிறுத்துக்கொள்ள
பதமென்னவருசுரங்கள் பறந்துபோகும்
படுபாவிபித்தமெல்லாம் பறந்துபோகும்
மதமென்றவாய்வெல்லா மகன்றுபோகுரா
வளமானஇன்னமொரு வரிசைசேளே. 73

## வில்வவேரின் கியாழம்

வரிசையுளவில்வவேர் நெற்பொரியுங்கூட்டி
வகைக்குக்கால்பலமா யிருநாழிநீரில்
உரிசையுடனெட் டொன்றாய் வடித்துக்கொண்டு
உடனருந்தவாத பித்தவிக்கந்தீரும்
பிரியமுடின்னமொரு கியாழம்சொல்வேன்
பேரானவில்வவேர் அமுக்கிலாம்வேர்
துருசானசுக்குடனே வகைக்குக்காலால்
கூட்டியேயிருநாழி நீரிலிட்டு. 74

இட்டவித்துஎட்டொன்றாய் வைத்துக்காய்ச்சி
இருந்துநீகொண்டிடவே விக்கல்வாந்தி
முட்டவருமசதியொடு ஊலைத்தாகம்
முறையானசுரந்தீரு மொழிந்தவாறே
சட்டமுடனின்னமொரு கியாழங்கேளு
தருவாளமுத்தமொடு விஷ்ணுகிராந்தி
இஷ்டமுடன்வகைக்குக் கால்பலமதாக
இருநாழிநீரில் விட்டொன்றுக்கே. 75

ஆக்கியேமூன்றுநா ளிருபோதுண்ண
அகண்டசயமீளை யிளைப்பதிகமூச்சு

போக்கிவிடுமதினோடு மிளகுகூட்டிப்
போட்டுவிடுகிஷாயத்தைத் தேனிற்கொள்ளு
வாக்கியமாயின்னமொரு கிஷாயஞ்சொல்வேன்
வளர்நெல்லிதான்றியுடன் கடுக்காய்மூன்று
தோக்கியேவகைக்குக் காற்பலமதாக
துண்மையாய்மிளகதிலே கழஞ்சுகூட்டே. 76

கூட்டியேயிருநாழி நீரிலிட்டுக்
குலாவவேயெட்டொன்றாய்த் தேனுஞ்சேர்த்து
நாட்டியேதிரிகடுகுமேற் பொடியாய்த்தூவி
நலமாகவேயருந்த சிலேற்பனங்கள்
நீட்டியேபீனியுட னிசுப்புக்கக்கல்
நிறுத்துமேகங்களெல்லாம் நினைவாய்க்காணும்
ஓட்டியேயிடுவதற்கு இன்னமொன்று
உறைக்கிறேனுலகத்தோர் பிழைக்கவென்றே. 77

## சந்தனக் கியாழம்

என்றதொருசந்தனமு * மிலாமிச்சம்வேர்
வெட்பாலைமுத்தமொடு சுக்குங்கூட்டி
நன்றெனவேவகைக்குக் கால்பலமதாக
நயமுடனேயிருநாழி நீரிலிட்டு
பொன்றெனவேயெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புகலுஞ்சர்க்கரையுடனே பத்துநாட்கொள்ள
நின்றதொருசிரவாய்வு சிரதோஷங்கள்
நிகழ்சுரத்திலுள்ள பித்தம்செட்டுவாதம். 78

## வேம்புக் கியாழம்

வாதமொடுசுரங்கள்நீர்க் கடுப்புத்தானு
மஞ்சளுறும்பித்தகா மாலைதீரும்

---

* *விலாமிச்சம்வேர் - குரிவேர்.*

வேதமொடுஇன்னமொரு கியாழஞ்சொல்வேன்
வேம்பினதுபட்டையுடன் மிளகுசுக்கு
நாதமொடுவகைக்காற் பலமதாக
நளினமுடனிருநாழி நீரில்விட்டு
போதமுடனெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புழுக்கிருமிமந்தமறும் வாய்வெல்லாமே. 79

## இருவேலிக் கியாழம்

எல்லாந்தான்தீரவொரு கியாழஞ்சொல்வேன்
இருவேலி * மதுரமுட னிஞ்சிகூட்டி
சொல்லாமல்வகைக்குக்கால் பலமதாகத்
தூக்கியேயொருநாழி நீரைவிட்டு
வெல்லவேதீயெரித்து எட்டொன்றாக்கி
விதமாகப்பத்துநாள் கொள்ளும்போது
வல்லதொருவாய்வுபோம் பித்தஞ்சாகும்
வகையுடனேபுவியிலிதை வகுத்திட்டேனே. 80

## பவுத்திரம் கண்டமாலைக்குக் கியாழம்

வருக்கக்கேள்கண்டமாலை பவுத்திரங்கள்
வலிமையுள்ளவிப்புருதி வீக்கம்தானும்
தொகுக்கக்கேள்துடைவாழை புண்சூலைதான்
தொந்தரவுசெயும்பிளவை வீக்கத்தோடு
மிகுதிட்டஅரையாப்பு மூன்றுமெய்யாய்
வேதனைகள்செய்யாம லுடைந்துபோக
பகுக்கக்கேளதற்குரிய மருந்தைநீயும்
படியினிலேகூறுவேன் பரிந்துதானே. 81

பரிந்துடனேஅமுக்கனுங் கிழங்கிரண்டும்
பாச்முள்ளபெருங்காய மிரண்டுகொண்டு

* மதுரம் - அதிமதுரம்

தெரிந்திடவேகோழிமுட்டை தன்னைவாங்கி
திகழுமதின்வெள்ளாம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவேசத்தனக்கல் தனிலுரைத்து
நேமமாய்மைபோலே வாரிக்கொண்டு
சொரிந்திடவேஅப்புண்மேற் கனமாய்ப்பூசிச்
சொலப்போகுங்கஷாயத்தின் சூட்சங்கேளே. 82

கேளப்பாகரசனுங் கண்ணிச்சாற்றிற்
கீர்த்தியுள்ளகற்றாழை மடலைச்சீவி
வேளப்பாவுள்ளிருக்குஞ் சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்த சாற்றிற்சேர்த்து
நாளப்பாயிரவியினிற் காயவைத்து
நன்றாகபத்துபல மானபோது
ஆளப்பா * திரிகடுகு † திரிபலாதி
அதைக்கண்டுவறுத்திடித்து வதனிற்சேரே. 83

சேர்த்திந்தவகைகளெல்லா மொன்றதாக
தீயனிலேகாயவைத்து மெழுகதாக
பார்த்ததனையிறக்கிக்கொண் டுடனேகேளாய்
பகருஞ்சர்க்கரைபலந்தான் பத்துகொண்டு
கீர்த்தியுடனதிற்கலந்து எட்டொன்றாக்கி
கேளப்பாசாடியினில் வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப்புன்னைக்கா யள்வதாகப்
புண்ணியனே ‡ மண்டலந்தா னென்றுகொள்ளே. 84

மண்டலந்தானொன்றுக் கிருபோதாக
மாறாமலதையருந்த மைந்தாகேளாய்
கண்டமாலைகள்பவுத்திரம் வீக்கம்தானும்
கூட்டியதோர் துடைவாழை அரையாப்போடு
கொண்டபுண்புரைகளெல்லாம் கெதிகெட்டோடும்
குருவாகஅதையெண்ணிச் செய்திட்டாலே

* திரிகடுகு - மிளகு, சுக்கு, திப்பிலி.
† திரிபலாதி - தான்றி, நெல்லி, கடுக்காய்.
‡ மண்டலம் - 40-நாள்.

அண்டிடாதெப்போது மாய்ந்துப்பாராய்
அன்பனே ஆயிசொல்லு மதியிதாமே. 85

மதிமிகுந்தபுவியிலுள்ள மனிதர்க்கெல்லாம்
வாய்த்தபிணிதீர்வதற்கு வளமதாக
நிதிமிகுந்தஅவிழ்தங்கள் தயிலத்தோடு
நிச்சயமாயங்கைநெல்லி கனியைப்போலப்
பதிமிகுந்தபாடல்க ளுண்மையாகப்
பகுத்திட்டேன்பண்பாக வயித்தியர்க்குத்
துதிமிகுந்ததாகவெண்ணிச் செய்வாராகிற்
றொலைந்தோடும்பிணிகளெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன்.

வைத்திய தைல முறைகள்
முற்றிற்று.

---

3 DEC 1981
MADRAS

திருமகள் அச்சகம், சென்னை-1; — 1971.

# வைத்திய புத்தக விளம்பரம்

**பதார்த்த குண விளக்கம்**

**முதல் பாகம் மூல வர்க்கம்** — விலை ரூ. 10-00

**ஷை இரண்டாம் பாகம் (தாது ஜீவ வர்க்கம்)** — விலை ரூ. 5-00

*[வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.]*

பல வைத்திய நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க இந்நூலை இப்போது புதியதாக வெளியிட்டுள்ளோம். இந்நூல் சித்த வைத்தியத்திற்குரிய மூலிகைகளே யன்றி தென்னாட்டு மருத்துவர்கள் கையாண்டுவரும் சில யூனானி ஆங்கிலச் சரக்கு களும் பதார்த்தகுண சிந்தாமணியில் கூறப்படாத பல மூலிகை சரக்குகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூல் உயிர்மெய் எழுத்து வரிசையில் ஒவ்வொரு சரக்கின் பெயரும், அதற்குரிய செய்யுளும் பின்னர் அதன் உரையும், அதன்கீழ் அச் சரக்கின் செய்கையும், உடயோகிக்கும் முறையும், மற்றும் வைத்தியர்க்குரிய பல அரும்பெரும் முறைகளையும் கூறப்பட்டுள்ளன.

**மூலிகை மர்மம் (4-பாகங்கள்)** — விலை ரூ. 5-00

*[சிறுமணவூர் முனிசாமி முதலியார் இயற்றியது.]*

இதனில் பாஷாணாதி கொடுஞ்சரக்குகள் கலப்பின்றி தனித்து மூலிகைச் சரக்குகளினாலேயே, முடியும் அநேக முறைகள் நூற் றுக்கணக்காக எழுதப்பட்டிருக்கின்றன. எல்லாவகை நோய் களுக்கும் பலவகை முறைகள் இந்த ஒரு நூலிலேயே அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முறைகளும் எவரும் எளிதாகச் செய்து கையாளலாம். எல்லாம் மூலிகைச் சரக்குகளினாலேயே முடிவதாகையால் ஒருவித பயமும் கெடுதியும் இல்லை. வைத்தி யர்களுக்கும் வைத்தியர் அல்லாதவர்களுக்கும் இது பெரும்பயன் தரத்தக்கது.

**வைத்திய சிந்தாமணி** — விலை ரூ. 5-00

*[வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.]*

இந்த "வைத்திய சிந்தாமணி" என்னும் நூலானது யூகிமா முனி என்பவரால் கூறப்பட்டது. இதனில் ரோக நிதானங்களை செவ்வனே கூறியிருப்பதினால் இதனை ஆதரவாகக் கொண்டும் சில கிரந்தங்களினின்று சிலது சேர்க்கப்பட்டும் ஒவ்வொரு ரோகங்களின் இறுதியில் ஆங்கிலேய மருத்துவத்தில் கூறப்பட் டுள்ள ரோக நிதான விஷயங்களை மதாந்தரமாகவும், அமைத்துக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு பல அரிய சிகிச் சைகளையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கண்ணுசாமி

## பரம்பரை வைத்தியம் — விலை ரூ. 6 - 00

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

இந்நூலாசிரியர் பல வைத்திய நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலை இயற்ற ஆரம்பித்து பல இன்னல்களின் இடையிலும் விடாமுயற்சியுடன் முடித்துத் தந்துவிட்டு இறுதியில் 14-12-1946-ல் தமது 72-ஆம் வயதில் இயற்கையை எய்தினார். பின்னர் இவ்வருமையான நூலினை மேற்படியார் குமாரர் டாக்டர் க. இராதாகிருஷ்ணன் (எல். ஐ. எம்) அவர்களைக் கொண்டு பரிசோதித்துச் செப்பஞ்செய்து புதியதாக அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். ஆதலின், இதுவே கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் கடைசியாக இயற்றிய சிறந்த வைத்திய நூலென்பது தெளிவாம். இதற்குமுன் வெளிவராததும் தான் இரகசியமாகக் கையாண்டு வந்ததுமான அநேக முறைகளை இந்நூலில் கூறியிருப்பதுடன், சித்தர் நூல்களில் மிகச் சிறப்புவாய்ந்த முப்புவைக் குறித்து தன்னுடைய ஆராய்ச்சியில் கண்ட சிறந்த கருத்துக்களை பரிபாஷையின்றி எளிய முறையில் விளக்கி யிருப்பது இந்நூலுக்கு ஓர் விசேஷ சிறப்பாகும். ஆதலால், ஒவ்வொரு வைத்திய நணபர்களுக்கும் சிறந்த பொக்கிஷம் போன்றது இந்நூல்.

## தேரையர் தைலவருக்கச் சுருக்கம் — விலை ரூ. 3 - 00

ஆயுர்வேத பாஸ்கரர்: சுப்பிரமணிய பண்டிதரவர்களால் எழுதிய உரையுடன் கூடிய சிறந்த வைத்திய கிரந்தம்.

இந்நூலில் குடித்தைலம் அதாவது குடிக்கும் எண்ணெயும், முடித்தைலம் அதாவது தலைக்கிட்டு முழுகும் தைலம், பிடித்தைலம் அதாவது தடவிப் பிடிக்கும் தைலம், துளைத்தைலம் அதாவது கண் செவி முதலிய இந்திரியத் துளைகளில்விடும் தைலம், புரைத்தைலம் அதாவது புரையோடும விரணங்கட்குச் சீலையில் நனைத்து உபயோகிக்கும தைலம் ஆகிய 147-தைல வகைகளைச் செய்பாக விளக்கத்துடன் கூறப்பட்டிருக்கிறது.

## நோயில்லா வாழ்வு — விலை ரூ. 2 - 00

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கேற்ப இந்நூலில் மாநதர் திடகாத்திர தேகிகளாய் வாழ வேண்டியதற்கான உண்ணும் விதி, உறங்கும் விதி, ஒழுகும் வகை, நாம் கையாளும் பொருள்களும் அவைகளின் தன்மைகளும், கருவுற்ற ஸ்திரீகளும், அவர்களின் நடைமுறைகளும், மருத்துவ வகை முதலியனவான பல விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

---

கிடைக்குமிடம்: B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,
57, வெங்கட்ராமையர் தெரு, கொண்டித்தோப்பு, சென்னை-1.

1987